# தமிழ்நாட்டிலே ஒரு பொற்கால ஆட்சி என்றால் கடந்த ஐந்து ஆண்டுகள் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சிதான்!

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

தொடங்குவதற்கான ரகசியச் செயல்திட்டத்தோடு களம் இறங்கினார்கள்.

மக்களே தெளிவாக இருங்கள்! மகாராஷ்டிராவில் பாரதிய ஜனதா கட்சி ஆரம்பத்திலே சோபிக்கவில்லை. மண் மணம் வீசக்கூடிய, மராட்டிய உணர்வு பொங்கி வரக்கூடிய அரசியல் தான் மராட்டிய மண்ணிலே நிலைநிறுத்தும் என்று கருதி, அங்கே சிவசேனாவை ஒரு மாநிலக் கட்சியாக உருவாக்கினார்கள். மகாராஷ்டிராவில் சிவசேனா உருவாக்கியதற்குப் பின்னால் இருக்கக்கூடிய அரசியல். தமிழ்நாட்டிலே ஆர்.எஸ்.எஸ். எடுபடாது என்று சொன்னவுடன் இந்து முன்னணியைக் கொண்டு வந்தார்கள். அதுபோலத்தான் பா.ஜ.க. எடுபடாது என்று சொன்னவுடன், தமிழ்நாட்டிலே அண்ணாமலை மூலமாக ஒரு அரசியல் கட்சியை உருவாக்கத் திட்டமிடுகிறார்கள். இந்த நுட்பமான அரசியலைத் தமிழ்நாட்டு மக்கள் கண்டுணர வேண்டும்; இந்த ஆபத்தான அரசியலில் நாம் அக்கறை கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால், டெல்லியின் இந்தப்படையெடுப்பு அரசியலை நாம் முறியடிக்க வேண்டும். தமிழ்நாட்டுடைய வாழ்வுரிமைகள் காக்கப்பட வேண்டும் என்று சொன்னால், திராவிட இயக்க அரசியல் பாதுகாக்கப்பட வேண்டும். திராவிட இயக்க அரசியலினால் தான் வட இந்தியாவுடைய அரசியல் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த முடியும் என்பதை நான் ஆணித்தரமாக வாதிட்டுச் சொல்கின்றேன். தமிழ்நாட்டுடைய இனமான உணர்வு காக்கப்பட வேண்டும் என்று சொன்னால், தமிழ்நாட்டுடைய சமூகநீதிக் கோட்பாடுகள், மரபுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொன்னால், தமிழ்நாட்டுடைய எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் பாதுகாக்கப்பட வேண்டும், வலிமைப்படுத்தப்பட வேண்டும்!

ஏனென்று சொன்னால், நான் தி.மு.க.காரன் அல்ல; அந்தக் கூட்டணியில் இடம் பெற்றிருக்கின்றேன். ஆனால் தமிழ்நாட்டினுடைய அரசியலைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால், பெரியார், அண்ணா, கலைஞர் சித்தாந்தங்களைக் காக்கக்கூடிய ஒரே கட்சியாக தி.மு.க.தான் இருக்கிறது. திராவிடத்தின் பெயரைப் பல கட்சிகள் வைத்திருக்கிறார்கள்; ஆனால் அவர்களெல்லாம் தி.மு.க. அளவிற்குத் திராவிடத்தை அழுத்தமாகப் பேசுகிறார்களா? யோசித்துப்பாருங்கள். எனவே தான், நுனிப்புல் மேயும் அரசியலிலிருந்து வளரும் தலைமுறையைக் காக்க வேண்டிய கடமைக்கு நாம் வந்திருக்கின்றோம்.

**கவர்ச்சி அரசியலின் ஆபத்தும் தத்துவ எழுச்சியின் தேவையும்!**

முன்பெல்லாம் பெற்றோர்கள் பேச்சைப் பிள்ளைகள் கேட்பார்கள்; இன்றைக்குப் பிள்ளைகள் பேச்சைக் கேட்டுத் தவறு செய்துவிட்டோம் என்று சொல்லக்கூடிய ஓர் அரசியல் அவலத்திற்குத் தமிழ்நாடு தள்ளப்பட்டிருக்கிறது. அமிதாப் பச்சன் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்; எங்கேயாவது உத்தரப் பிரதேசக்காரன் அமிதாப் பச்சனைப் பிரதமராக்க வேண்டும் என்று சொல்கிறானா? பம்பாயில் எந்த மராட்டியராவது அமீர் கான் முதலமைச்சர் ஆக வேண்டும், ஷாருக்கான் எதிர்க்கட்சித் தலைவராக ஆக வேண்டும் என்று சொல்கிறானா? கேரளாவில் யாராவது மம்மூட்டி முதலமைச்சர் ஆக வேண்டும், மோகன்லால் எதிர்க்கட்சித் தலைவராக வேண்டும் என்று சொல்கிறானா? ஆனால், முற்போக்கு பேசக்கூடிய மாநிலத்தில், கவர்ச்சி அரசியலிலே ஒரு தலைமுறை தவறு செய்துவிட்டதே! அதை நினைத்துத் தூங்க முடியவில்லை. இதற்குப் பெயர் என்ன புரட்சியா? “புரட்சிகர வாழ்த்துக்கள்” என்று சொல்லப் போகிறார்களே, இதில் என்ன புரட்சி? தத்துவங்களின் அடிப்படையில் ஓர் எழுச்சி ஏற்பட்டு, அது புரட்சியாக மாறினால் அதை நாம் வரவேற்போம்; ஆனால் எந்தத் தத்துவ எழுச்சியும் ஏற்படவில்லையே!

மேகதாது விஷயத்தில் உங்களுடைய நிலைப்பாடு என்ன என்பதைச் சொல்ல முடியுமா? நாளைக்கே முல்லைப் பெரியாறு விவகாரம் வந்தால், உங்களுடைய நிலைப்பாடு என்ன என்பதை நீங்கள் சொல்ல முடியுமா? நீட் தேர்வில் உங்களுடைய நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியுமா? மேடைகளில் வீரவசனம் பேசுகிறீர்கள், மேடையில் பாய்ந்து பிராண்டுகிறீர்கள்; ஆனால் சட்டமன்றத்தில் பூனைக்குட்டி மாதிரி அமைதியாக உட்கார்ந்திருக்கிறீர்கள்! ஆனால், சட்டமன்றமாக இருந்தாலும் மக்கள்மன்றமாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரும் புள்ளிமா னாகத் துள்ளிக் குதித்து மக்களுக்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் உண்மையிலேயே பாராட்டுகிறேன்; திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், அதனுடைய இளைஞரணித் தலைவர், அதனுடைய முன்னணி நிர்வாகிகள் அனைவரையும் பாராட்டுகின்றேன். ஏனென்று சொன்னால், வெற்றி தோல்விகளை ஒரு பொருட்டாகக் கருதாமல், “மக்களுக்காக உழைப்போம், போராடுவோம்” என்ற நம்பிக்கையிலே நீங்கள் இயங்கிக் கொண்டிருக்கிறீர்களே, அந்தச் சித்தாந்த எழுச்சி உண்மையிலேயே என்னை மகிழ்ச்சியடைய வைக்கின்றது. இந்தச் சித்தாந்த எழுச்சி தேசிய அளவில் இல்லாமல் போய்விட்டது. ‘... பெல்ட்’ என்று சொல்லக்கூடிய இந்தி பேசக்கூடிய மாநிலங்களிலே இந்த அரசியல் தெளிவுத்தன்மை இல்லாமல் போனதனால் தான், இந்த நாடு மிகப்பெரிய சிக்கலிலே தவித்துக் கொண்டிருக்கிறது.

**திராவிட மாடலின் உண்மையான ஜனநாயகம்!**

இன்றைக்குப் பேசுகிறார்கள், சாதி பார்க்கவில்லை, மதம் பார்க்கவில்லை, மக்கள் ஜோசப் விஜய்க்கு வாக்களித்து விட்டார்கள் என்று சொல்லி... சாதி பார்க்கவில்லை, மதம் பார்க்கவில்லை, ஜோசப் விஜய் என்பவரை மக்கள் வாக்களித்துத் தேர்வு செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், திராவிட இயக்கம் தமிழ்நாட்டைச் சிந்திக்க வைத்ததன் விளைவாகத்தான் அது நடந்திருக்கிறது. அதுவும் திராவிட இயக்கத்தினுடைய ஒரு சாதனை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த மன நிலை மாற்றத்தைக் கொண்டு வந்தது யார்? இந்தத் திராவிட இயக்கம்!

இந்தத் ‘திராவிட மாடல் அரசு’ என்கிற ஒரு சொல்லாட்சியை நாம் ஐந்தாண்டு காலம் பயன்படுத்தி வந்தோம். நான் யோசித்துப்பார்த்தேன், திராவிட மாடல் என்றால் என்ன? அதிலே ஜனநாயகம் இருக்கிறது. தி.மு.க.வுடைய தலைவருக்கு என்று ஒரு கொள்கை இருக்கிறது, அண்ணன் சேகர் பாபு அவர்களுக்கு என்று ஒரு கொள்கை இருக்கி றது, நண்பர் தாயகம் கவிக்கும், தமிழன் பிரசன்னாவுக்கும் ஒரு கொள்கை இருக்கிறது; ஆனால் ஆட்சி அதிகாரம் என்று வந்த பிறகு, தங்களுடைய நேரிய கொள்கைகளை யாருக்கும் பாதிப்பில்லாமல் செயல்படுத்தியிருக்கிறார்களே, அது தான் திராவிட மாடல் அரசு, ...ஜனநாயகம்!

இங்கே அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அமர்ந்திருக்கிறார்; உண்மையிலேயே உங்களை நான் பாராட்டுகிறேன். இதுவரை எந்த ஆட்சியும் அரசும் செய்யாத அளவிற்கு, இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 8 ஆயிரம்கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை மீட்டெடுத்துக் கொடுத்திருக்கிறீர்களே! பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருந்திருந்தாலோஅல்லது அவர்களைச்சார்ந்தவர்கள்இருந்திருந்தாலோ இத்தகைய சாதனைகளைச் செய்திருக்க முடியுமா? “யாருக்கும் எதிரான வர்கள் அல்ல, எல்லோருக்கும் உங்களுடைய தேவைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போம்” என்பதை அந்தத் திராவிட மாடல் அரசு சொன்னது. 8 ஆயிரம்கோடி ரூபாய் சொத்து சாதாரண சொத்தா? அதேபோன்று 4,500க்கும் அதிகமான கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறார். மத நம்பிக்கை உள்ளவர்கள் என்று சொல்லக்கூடிய ஆட்சியாளர்கள் செய்யாத சாதனைகளை எல்லாம் திராவிட மாடல் அரசு செய்தது.

எந்தச் சமூகத்திற்கு எதிராகவும் அவர்கள் செயல்பட்டார்களா? சமூக நீதியை நிலைநாட்டினார்கள், ஆட்சியிலே மனிதநேயத்தை நிலை நாட்டினார்கள். இந்து அறநிலையத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டது என்று சொன்னால், கடந்த ஆட்சியில் தான் என்றுநான் அடித்துச் சொல்வேன். இந்தியாவிலே ஒவ்வொரு ஆட்சியிலும் ஒவ்வொரு காலகட்டத்தைப் பொற்காலம் என்று சொல்வார்கள், இது சோழர்களின் பொற்காலம், இது குப்தர்களின் பொற்காலம், இது விஜயநகரப் பேரரசின் பொற்காலம், இது முகலாயர்களின் பொற்காலம் என்று சொல்வார்கள். தமிழ்நாட்டிலே சுதந்திரத்திற்குப் பின்னாலே ஒரு பொற்கால ஆட்சி நடந்தது என்று சொன்னால், அது கடந்த ஐந்து ஆண்டுகள் நடைபெற்ற திராவிட மாடல் அரசின் ஆட்சிதான் என்று சமரசமின்றி சொல்வேன்!

எவ்வளவு திட்டங்கள், எவ்வளவு நுட்பமான பெயர்களிலே எளிய மக்களுடைய முன்னேற்றங்களுக்கான வசதி வாய்ப்புகளைச் செய்து கொடுத்தார்கள்! ஏழை எளிய மக்களுடைய உள்ளங்களில் எவ்வளவு பெரிய மகிழ்ச்சி! கல்விக்காக அவர்கள் அளித்த திட்டங்கள் என்ன? மகளிரினுடைய பொருளாதாரத்தை ‘விடியல் பயண’ இலவசப் பேருந்துத் திட்டம் எந்த அளவிற்குச் சேமித்துக் கொடுத்தது? மகளிர் உரிமைத் தொகையினுடைய வரவின் மூலமாக எத்தனை குடும்பங்கள் மகிழ்ச்சியாக இருந்தன என்பதை நினைத்துப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட சாதனைகள் செய்த ஓர் ஆட்சிக்கு மக்கள் தோல்வியைத் தந்திருக்கிறார்கள். பார்த்துப் பார்த்துத் தன் குடும்பத்துப் பிள்ளைகளை எப்படி வளர்த்து ஆளாக்கி, அவருடைய முன்னேற்றத்திற்கு ஒரு தந்தையாக இருந்து என்னவெல்லாம் செய்வாரோ, அதேபோன்று கொளத்தூர் தொகுதிக்கு மாறி மாறி உழைத்து உழைத்துச் செய்தார், அங்கு தோல்வி.

**சர்ச்சிலின் வரலாறும், தளபதியின் உன்னதப் பண்பும்!**

நீங்கள் கவலைப்படக் கூடாது; வரலாற்றைப் படித்தவர்கள் கவலைப்பட மாட்டார்கள். இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற போது, ஜெர்மனியுடைய போர் விமானங்களும், கப்பல்களும் இங்கிலாந்தைச் சுற்றி வந்தன. போரிலே ஹிட்லர் வெற்றி பெறப் போகிறார் என்று சொன்னவுடன், இங்கே சென்னையில் இருக்கக்கூடிய சில பேர்... (யார் என்று நான் சொன்னால் நன்றாக இருக்காது; அதை அண்ணன் சேகர்பாபுவோ அல்லது தமிழன் பிரசன்னாவோ, தாயகம் கவியோ சொல்லலாம்) “இனி ஆங்கிலம் தேறாது, ஜெர்மன் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும்” என்று சொல்லி, ஜெர்மன் ஹாலைச் சென்னையிலே தொடங்கியவர்கள் யார் என்பது நமக்குத் தெரியும்.

அந்த நேரத்தில் இங்கிலாந்து மக்களுடைய நம்பிக்கையைக் காப்பாற்றும் விதமாக, அவருடைய பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் சிறப்பாகச் செயல்பட்டு அந்தப் போரிலே இங்கிலாந்திற்கு வெற்றியைத் தேடித் தந்தார். வரலாறு காணாத வெற்றியை ஜெர்மனிக்கு எதிரான அந்தப் போரிலே வின்ஸ்டன் சர்ச்சில் பெற்றுக் கொடுத்தார். அடுத்து வந்த தேர்தலிலே, அவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றுக் கொடுத்த வின்ஸ்டன் சர்ச்சிலை இங்கிலாந்து மக்கள் தேர்தலிலே தோற்கடித்தார்கள்! இதுதான் ஜனநாயகம். இரண்டாம் உலகப்போரிலே நாட்டைக் காத்த ஒரு தலைவனுக்கே தோல்வியைக் கொடுத்த வரலாறு இங்கிலாந்திலே உண்டு.

அதுபோலத்தான், மாபெரும் சிறப்பான ஆட்சியை நடத்திய நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றல்மிகு தலைவர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அங்கே ஒரு தோல்வியைச் சந்தித்திருக்கலாம்; ஆனால் உலகமெங்கும் வாழக்கூடிய தமிழருடைய உள்ளத்திலே மாபெரும் வெற்றியைச் சம்பாதித்திருக்கிறார்! எனக்கு என்ன ஒரு பெரிய ஆச்சரியம் என்றால், தன்னுடைய தொண்டர்கள் கலங்கிவிடக் கூடாது என்று அன்று மாலையே அறிவாலயத்திற்கு வருகிறார்; “ஓய்வெடுத்துவிடக் கூடாது, நம்முடைய தொண்டர்கள் துவண்டுவிடக் கூடாது” என்று சொல்லி அடுத்த நாளே தொகுதிக்கு வருகிறார். அவ்வாறு வந்த இடத்தில் எங்காவது வசைபாடினாரா? ஆற்றாமையை வெளிப்படுத்தினாரா? அதுதான் ஒரு தலைவனுக்கான தகுதி! அதுதான் ஒரு தலைவருக்கான உயரிய பண்பு! மக்களைச் சந்திக்கிறார், தான் செய்த சாதனைகளைச் சொல்கிறார்; இவையெல்லாம் எங்களுடைய ஆட்சியிலே நடைபெற்றது என்று சொல்லி, “மீண்டும் மீண்டும் மக்களைத் தேடியே நான் வருவேன்” என்பதை நிரூபித்துவிட்டுச் சென்றார். அதுதான் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். வேறொரு தலைவருக்கு இந்தத் தோல்வி ஏற்பட்டிருந்தால், ஒரு வாரம் அவர்கள் வீட்டை விட்டு வெளியே வந்திருக்க மாட்டார்கள்; ஆனால் வெளியே வந்து மக்களைச் சந்தித்து, உற்சாக மூட்டி, இப்போது வரை மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்.

**சிதம்பரத்தின் வெற்றியும் தளபதியின் சுயமரியாதை உணர்வும்!**

எனக்கு இன்னொரு ஆச்சரியம்... நான் சிதம்பரத்திலே ஒரு வெற்றி பெற்று வருகிறேன். என்னுடைய வெற்றி என்பது, அண்ணன் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்கள், தளபதி அவர்களுடைய உத்தரவை ஏற்றுச் சிறப்பாக எனக்காகப் பணியாற்றினார். இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்தைக் கூர்தீட்டிய பூமி எது என்று சொன்னால், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வளாகம்! அங்கு தமிமுன் அன்சாரி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதயசூரியன் சின்னத்தில் வெற்றி பெற்றான் என்று சொன்னால், இந்தி எதிர்ப்புப் போராட்டத் தியாகிகளுக்குக் கிடைத்த வெற்றியாகத்தான் அதைக் கருதுகின்றேன். 25 ஆண்டுகாலம் எதிர் முகாமில் இருந்த தொகுதி அது.

அந்த மகிழ்ச்சியோடு தளபதி அவர்களைச் சந்திக்க வருகிறேன்; ஆனால் நான் மகிழ்ச்சியாக இல்லை. அவரிடமே சொன்னேன், அப்போதான் சொன்னேன், “அண்ணே, நான் இரண்டு தொகுதி கேட்டேன், ஒரு தொகுதி கட்சிக்குத் தந்தீர்கள்; நான் வெற்றி பெற்று வந்துவிட்டேன். நான் ராஜினாமா செய்கிறேன், நீங்கள் அங்கே நின்று போட்டியிடுங்கள்” என்று சொன்னேன். உடனடியாக அந்தப் பெருந்தன்மை... “அந்த வார்த்தையை நீங்கள் சொல்லக் கூடாது” என்றார். ஒரு உன்னதமான, உயர்வான பண்பு!

அதன் பிறகு நிறைய உரையாடினோம். அந்தச் சமயத்தில் ஒரு காட்சி... அவர் மீது எனக்கு இன்னும் மரியாதை கூடிவிட்டது. அந்த வீட்டில் நிற்கிறேன்; பல தொண்டர்கள் வரிசையாக வருகிறார்கள். அண்ணன் கோவி. செழியன் அவர்கள் வருகிறார்; தகுதி வாய்ந்த ஒருவரைத் தகுதி வாய்ந்த பொறுப்புக்கு அமர்த்தியவர் தளபதி. அந்த வீட்டிலே பலரும் வருகை தந்து தளபதி அவர்களைச் சந்தித்துவிட்டு, கை குலுக்கிவிட்டு, தங்களுடைய மனக் குமுறல்களைச் சொல்லிவிட்டுச் செல்கிறார்கள்; நான் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறேன். அந்த நேரத்தில் ஒரு தொண்டர் உணர்ச்சிவசப்பட்டு, நம்முடைய அண்ணன் முன்னாள் முதல்வர் தளபதி ஸ்டாலின் அவர்களுடைய காலிலே விழப்போகிறார்; கோபத்தோடு அதைத் தடுத்த அண்ணன் தளபதி ஸ்டாலின் அவர்கள், “காலில் எல்லாம் விழக்கூடாது” என்று சொல்லி, சுயமரியாதை உணர்வைப் பின்பற்றித் தொண்டர்களுக்கும் அந்தச் சுயமரியாதையை அந்த நேரத்திலும் எடுத்துச் சொன்னாரே, நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்தேன்! பல பேர்பேசுவார்கள், ஆனால் அறைக்குள்ளே சமரசங்களைச் செய்து கொள்வார்கள். அந்த இடத்திலும்கூடத் தன் தொண்டன் தன் காலிலே விழக்கூடாது என்று தடுத்து, சுயமரியாதையை ஊட்டிய ஒரு தலைவராகத் தளபதி அவர்கள் நிற்கிறார்; அதனால்தான் நாம் யாரும் கவலைப்படவில்லை.

**தேர்தல் வாக்கு வங்கியும் சிறு பான்மையினரின் அரணும்!**

இப்போது ஆட்சிக்கு வந்திருப்பவர்கள் ஒரு வகையான மிதப்பில் இருக்கிறார்கள்; யாரையும் அவ்வளவு எளிதாகச் சந்திப்பது இல்லை. மிகப்பெரிய தலைவர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்டவர்கள் எல்லாம், இரண்டாம் நிலைத் தலைவர்களுக்கு முன்னால் தான் துண்டுபோட்டு சேரக்கூடிய நிலையில்தான், அவர்களுடைய ஆணவ அரசியல் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதனால் தமிழ்நாட்டு மக்கள் மிகுந்த நம்பிக்கையோடு இருக்கிறார்கள், காலம் நமக்காகக் காத்திருக்கிறது. தத்துவ அரசியலை முன்னெடுக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் மீண்டும் ஆட்சியை ஒப்படைக்கத் தமிழ்நாடு காத்திருக்கிறது!

இந்த நிகழ்காலச் சோதனைகள் கடந்து போகும். “இதுவும் கடந்து போகும்” என்பார்களே, அதேபோன்று இந்தநாட்களைநாம்கடந்துபோவோம். திராவிட மாடல் ஆட்சி ஏற்படுத்திய அதே சாதனைகளை மீண்டும் மக்களிடம் எடுத்துச் சொல்லி, மீண்டும் ஒரு திராவிட மாடல் அரசை அமைக்கும் வரை உற்சாகமாகப் பணியாற்ற நாம் எல்லோரும் தயாராவோம்.

எங்களுடைய மனிதநேய ஜனநாயகக் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியிலே என்றும் தொடரும் என்று கூறிக்கொண்டு... ஒரு சிலர் நன்றி மறந்து போயிருக்கிறார்கள்; போகட்டும். ஆனால், அந்த நேரத்தியெல்லாம் தளபதி அவர்கள் மேடையில் பார்க்கும்போது முகத்தையெல்லாம் தடவிக் கொடுத்தார்கள். ரொம்பக் கொண்டாடினார்கள். “அண்ணன், அண்ணன்” என்றார்கள். ‘தகைசால் தமிழர்’ என்ற விருதை பெரியவர் காதர் மொகிதீன் அவர்களுக்கு கொடுத்தார். “அண்ணன் அண்ணன்” என்றுதான் சொல்லுவார். எங்களைப் போன்ற இளைஞர்களும், மாணவர்களும், பெண்களையும் கூடத் தளபதி அவர்கள் அடுத்த நிலையிலே வைத்துவிட்டு, அவர்களைக் கொண்டாடினார். ஆனால் என்ன செய்கிறார்கள்? கூட்டணி மாறுகிறார்கள்.

நீங்கள் கூட்டணி மாறுவது உங்கள் உரிமை; தளபதி அவர்களே சொல்லிவிட்டார்களே, “ஒவ்வொரு கட்சியும் அவரவர் விருப்பத்தின்படி ஜனநாயக அடிப்படையில் முடிவெடுத்துக் கொள்ளலாம்” என்று சொல்லிவிட்டார். யாரையும் கட்டிப்போடவில்லை. ஆனால் பிரிந்து போகும்போது கூட நண்பர்களாக நீங்கள் பிரிந்து போயிருக்க வேண்டும்; பழைய வரலாறுகளையும் எதிர்காலத்தையும் மனதிலே கொண்டு நீங்கள் யோசித்திருக்க வேண்டும். ஆனால், “எங்களால்தான் நீங்கள் ஜெயித்தீர்கள்” என்று சொன்னீர்களே... உங்களுடைய முஸ்லிம் லீக் கட்சியினுடைய வாக்குகள் வேறு, முஸ்லிம் சமுதாயத்தின் வாக்குகள் வேறு என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்!

இந்தத் தேர்தலிலே தமிழ்நாடு எங்கும் பார்க்கின்றோம்; நீங்கள் மண்ணடியிலே எடுத்துப் பாருங்கள்... புள்ளி விவரம், சராசரியாக 70 முதல் 90 சதவீதம் முஸ்லிம்களுடைய வாக்குகள் தி.மு.க. தலைமையிலானகூட்டணிக்குத் தான் விழுந்திருக்கிறது. ஓரிரு இடங்களில் அதனுடைய எண்ணிக்கை முன்பின் இருக்கலாம்; ஆனால் எந்த இடத்திலும் 70 சதவீதத்திற்கும் அதிகமாகத்தான் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு வாக்குகள் விழுந்திருக்கிறது. பல இடங்களிலே 95 சதவீத வாக்குகள், மொத்தமாக முஸ்லிம் சமுதாயத்தினுடைய வாக்குகள் இங்கு விழுந்திருக்கிறது. ஏன் தெரியுமா? முஸ்லிம்கள், சிறுபான்மை மக்கள் நம்புகிறார்கள்; என்னவென்று சொன்னால், வட இந்தியா முழுக்கக் கலவரக் காடுகளாக மாறிக் கொண்டிருக்கிறது, வகுப்புவாத சக்திகள், மதவாத சக்திகள் தலைவிரித்து ஆடுகிறார்கள், இந்த நேரத்திலே தமிழ்நாடு அமைதியாக இருக்க வேண்டும் என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் வந்தால் மட்டும்தான் அது சாத்தியமாகும் என்று மனதார உணர்ந்த காரணத்தினால்தான்!

எங்கெல்லாம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இருந்ததோ, முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதியில் இருக்கக்கூடிய எண்ணிக்கையை நீங்கள் ஆய்வு செய்து பார்த்தால், பெரும்பாலான இடங்களிலே90 சதவீதம், 95 சதவீதம் உதயசூரியனுக்கும், அந்தக் கூட்டணிக்கும் தான் விழுந்திருக்கிறது. சிறுபான்மை மக்கள் தங்களுடைய அன்பிற்கினிய ஒரு நண்பராக, அண்ணனாகத் தளபதி அவர்களைக் கருதுகிறார்கள்; திராவிட முன்னேற்றக் கழகத்தைச் ஒரு சமூக நீதி அரணாகக் கருதுகிறார்கள்.

நான் ஏற்கனவே சுட்டிக்காட்டி விட்டேன், அரசியலுக்காகப் பேசுவது என்பது வேறு, கூட்டணிக்காகப் பேசுவது என்பது வேறு. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் சமூக நீதி, மதச்சார்பின்மை விஷயத்திலே அவர்கள் அரசியலுக்காகப் பேசுவதில்லை; சமூகவியல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பேசக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அதனால்தான் இந்தக் கூட்டணியில் நாங்கள் தொடர்கிறோம், தொடர்வோம் என்ற நம்பிக்கையைக் கூறிக் கொண்டு... எழுச்சிமிக்க இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், அவருடன் இருக்கக்கூடிய தோழர்களுக்கும் என்னுடைய புரட்சிகரமான வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர் 23வது வார்டில் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் ஜெ.சாகீர்உசேன் ஏற்பாட்டின் பேரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 100க்கும் மேற்பட்ட பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை வர்த்தக அணி சரவணன் வழங்கினார். இதில் மாவட்ட துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.மதார்சேட், ஒன்றிய செயலாளர் பூ பாலசிங்கம், இலக்கிய அணி சேவியர், அழகையா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. வாசுதேவன்

**ஜூன் 12 (2020)**



**தனது இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் கிளைச் செயலாளராகவும், அண்ணாகிராம ஒன்றிய துணைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, ஒன்றிய பொருளாளர் என கழகத்தில் பொறுப்புகள் வகித்தவர்.**

**ஊராட்சி மன்றத் தலைவர், ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்க தலைவர் அருங்குனம் கூட்டுறவு சங்க இயக்குநர் என பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**